**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No: 59/2022** **நாள் 29.01.2026.**

**வாசா.1, திருமதி.வித்யாரத்னா**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1 முதல் 3 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

என் தாத்தா முத்தையா அவருக்கு எத்தனை வயது இருக்கும் போதுஅவர் இராஜபாளையத்திற்கு வந்து குடியேறினார் என்று கேட்டால் அதை பற்றிஎனக்கு தெரியாது. முத்தையா இராஜபாளையத்தில் குடியிருந்து வந்த சமயத்தில் அவர் கூலி வேலை தான் செய்து வந்தார் என்றால் சரிதான். இராஜபாளையத்தில் என் தாயார் பெயரில் ஒரு வீடு உள்ளது என்றால் அது சரிதான். அந்த வீடானதை என்தாயாரின் சுய சம்பாத்தியத்தின் பேரில் தான் கிரையம் வாங்கியது என்று சொன்னால் கிரைய தொகையானதை என் அப்பா கொடுத்து என் அப்பா பெயரில் கிரையம் வாங்கப்பட்டது. அதற்கு என் தாத்தாவும் கொஞ்சம் உதவி செய்தார். அந்த வீடானதை நாங்கள் 2007 ம் ஆண்டு விற்றுவிட்டு என் தாயார் மும்பைக்கு குடியேறினார் என்று சொன்னால்அந்த வீடானது சமீபத்தில் தான் என் தாயார் கிரையம் செய்து திருநெல்வேலிக்கு வந்துவிட்டார். என் திருமணத்திற்கு என் தாய் மாமா கிரகராஜ், வைரபிரகாசம் மற்றும் தாத்தா முத்தையா ஆகியோர்கள் வந்து கலந்துகொண்டார்களா என்று கேட்டால் அவர்கள் மூவரும் கலந்துகொள்ளவில்லை. என் தாயாரானவர் என் தாத்தா முத்தையாவிடம் சொத்தை கேட்டதாகவும் அதற்கு என் தாத்தா அந்த சொத்தானது என்தாத்தாவுக்கு சுயமாக சம்பாத்தியம் செய்யப்பட்ட சொத்து என்று சொல்லி அவர் என்தாயாருக்கு தராததால் நான் தான் என் திருமணத்தின்போது அவர்களை பத்திரிக்கை வைத்து அழைக்கவில்லை என்று சொன்னால் அப்படி சம்பவம் எதுவும் நடக்கவில்லை. தாவா சொத்துக்கள் அனைத்தும் முத்தையா கிரையம் வாங்கிய சொத்துக்கள் என்று சொன்னால்அப்படியில்லை. நாங்கள் தாக்கல் செய்துள்ள பிராதில் தாவா சொத்துக்கள் அனைத்தும் முத்தையாவின் சுயசம்பாத்திய சொத்துக்கள்என்றும் அந்த சொத்துக்களுக்குண்டான கிரைய ஆவணங்கள் அனைத்தும் 1 முதல் 3 எதிர்வாதிகள் வசம் தான் உள்ளது என்று நாங்கள் சொல்லியுள்ளோம் என்றால் அது சரிதான். பிராது சொத்துக்களை தவிர்த்து என் தாத்தா முத்தையா என்பவர் கோப்பநாயக்கன்பட்டி, சிவகாசி ஆகிய இடங்களில் சுயமாக சொத்துக்களை கிரையம் வாங்கியிருந்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. கோப்பநாயக்கன்பட்டியில் ஜெயலட்சுமி பயர் ஓர்கஸ் 2 என்ற நிறுவனத்தை என் தாத்தா முத்தையா ஆரம்பித்து இருந்தார் என்றால் அது சரிதான். அந்த சொத்துக்களை என் தாத்தா விற்றுவிட்டார் என்று சொன்னால் என் தாத்தா விற்ற சமயத்தில் எனக்கு சிறு வயதுஅதனால் விற்றது தெரியாது வாங்கியது தெரியும். அந்த சொத்துக்களை இந்த வழக்குரையில் நாங்கள் சேர்க்கவில்லை. நாங்கள் வழக்கை தாக்கல் செய்த சமயத்தில் கோப்பநாயக்கன்பட்டியில் உள்ள ஜெயலட்சுமி பயர் ஒர்க்ஸ் 2 என்ற நிறுவனமானது யார் அனுபவத்தில் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. கோப்பநாயக்கன்பட்டியில் உள்ள ஜெயலட்சுமி பயர் ஒர்க்ஸ் 2 என்ற நிறுவனமும் மற்றும் சிவகாசியிலும் சில சொத்துக்களை என் தாத்தா முத்தையா சுயமாக சம்பாதித்த சொத்தை தான் அவர் விற்றுள்ளார் என்றும் அந்த விபரம் எனக்கு தெரிந்து தான் நாங்கள் அந்த சொத்துக்களை இந்த வழக்குரையில் சேர்க்கவில்லை என்று சொன்னால் அப்படியில்லை. என் தாயாருடைய அசையும் சொத்துக்களை நாங்கள் அனைவரும்

சேர்ந்து பிரித்துக்கொண்டோம். தாவா சொத்துக்கள் முத்தையாவுடைய சொத்துக்கள் என்றும் அவருக்கு என் தாயார் வாரிசுதாரர் என்றும் அந்த வகையில் நாங்கள் தாவா சொத்துக்களில் பாகம் கோரியுள்ளோமா அல்லது தாவா சொத்துக்கள் முத்தையாவுக்கு கர்த்தா வகையில் பாத்தியப்பட்டது என்று நாங்கள் வழக்கை தாக்கல் செய்துள்ளோமா என்று கேட்டால் முத்தையாவுக்கு கர்த்தா வகையில் பாத்தியப்பட்டது என்று சொல்லி தான் நாங்கள் பாகம் பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். முத்தையாவுக்கு பாத்தியப்பட்ட பிராது சொத்துக்களை பொறுத்தமட்டில் உள்ள ஆவணங்களின் நகல்களை நாங்கள்இந்த வழக்கில் தாக்கல் செய்யவி'லை என்று சொன்னால் அதை பற்றிய விபரம் எங்களுக்கு தெரயவில்லை. வழக்கறிஞருக்கு தெரியும். முத்தையாவுக்கு கர்த்தா என்று முறையில் சொத்துபாத்தியப்பட்டது என்று சொல்லும் போது என் தாத்தா முத்தையா உயிரோடு இருந்த காலத்தில் என் தாயாரோ அல்லது என் தாயாருடன்பிறந்த சகோதரிகளோ அவரிடம் பாகம் எதுவும் கோரினார்களா என்று கேட்டால் அப்போது அதற்கான சந்தர்ப்பம் இல்லை என்பதால் பாகம் கோரவில்லை. என் தாத்தா முத்தையா இறந்த பின்பும் என் தாயார் சொத்துக்களை பொறுத்து பாகம் கேட்டாரா என்று கேட்டால் குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் மூலமாக வைத்து பேசி பாகம் கோரினார். அதற்கு அவர்கள் சொத்தானது உயில் மூலமாக பாத்தியப்பட்டது என்றும் அதனால் பாகம் எதுவும் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள் என்றால் அப்படி உயில் எதுவும் இல்லை. உயில் பற்றி பேசவில்லை. என் தாயார் வழக்கறிஞர் திரு. தங்கமணி என்பவரை வைத்து 29.08.2020 ம் தேதியில் 26.12.2008 ம் தேதியில் உயில் ஆவணம் இருப்பதாக சொல்லி கூறி அதற்கு நகல் கேட்டு அறிவிப்பு ஒன்றை அனுப்பியிருந்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாயார் உயிரோடு இருந்த காலத்தில் தாவா சொத்தில் என் தாயார் பங்கு கேட்டிருந்தாரா என்று கேட்டால் என் தாயார் தான் பங்கு கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். என் தாயார் இறந்த பின்பு தான் நாங்கள் வாரிசுதாரர்களாக இருந்து இந்த வழக்கை நடத்தி வருகிறோம். நான் சொல்வது போல் என் தாயார் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நானும் என்னுடைய சகோதர சகோரிகள் அனைவரும் சேர்ந்து தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் அது சரிதான். என் தாயாருக்கு மேற்படி முத்தையா என்பவர் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தை எழுதி வைத்திருந்ததை தெரிந்த காரணத்தினால் தான் என் தாயார் பாகம் கோரி வழக்கு எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. என் தாயார் உயிரோடு இருந்த காலத்திலேயே மேற்படி உயில் பற்றி ஆவணத்தை பொறுத்து எங்களிடமும் என்னுடைய சகோதர சகோதரிகளிடம் சொல்லியிருந்தார் என்று சொன்னால் அது சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள பிராதில் என் தாயார் உயிரோடு இருந்த கால்த்தில் அவர் என் தாத்தாவான முத்தையா வீட்டிற்கு சென்று அவர் பங்கு தொகையை பெற்று வந்தார் என்று சொல்லியிருந்தோம் என்று சொன்னால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் உயில் தேதியான 26.12.2008 ம் தேதி க்கு முன்பே சுமார் 15 வருடத்திற்கு முன்பே என் தாத்தா முத்தையா சுயநினைவின்றி சிந்தனையில்லாமல் முன்னுக்கு பின் முரணான பேச்சிலும் செயலிலும் உடல் நலம் பாதிக்கப்பட்டு தான் செய்ய வேண்டிய காரியங்களை செய்யமுடியாமல் படுத்த படுக்கையாக வெளி மனிதர்களை பார்க்க பேச முடிமயாமல் இருந்து வந்ததாக குறிப்பிட்டுள்ளோம் என்று சொன்னால் சரிதான். என் தாயார் அவருடைய தந்தையான முத்தையாவிடமிருந்து என் தாயாரின் பங்கை என் தாயார் பெற்றுவந்ததாக நான் சொல்லும்போது அதே வேலையில்

26.12.2008ம தேதிக்கு 15 ஆண்டு முன்பே என் தாத்தா மேற்சொன்னவாறு உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்தார் என்று சாட்சியம் அளிக்கும் போது அதில் எது உண்மை என்று கேட்டால் என் தாத்தா உடல்நலம் பாதிக்கப்பட்டும் மனநலம் பாதிக்கப்பட்டும் இருந்தார் என்று நான் சொல்வது தான் உண்மை. என் தாத்தா நடத்தி வந்த கோப்பநாயக்கன்பட்டியில் உள்ள ஜெயலட்சுமி பயர் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தில் மின்சார விபத்து ஏற்பட்டதாக சொல்லி என் தாத்தாவுக்கு எதிராக வன்னியம்பட்டி காவல் நிலையத்தில் ஒரு குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2 நீதிமன்றத்தில் CC .222/2013 ஆக வழக்கு நடைபெற்று அந்த வழக்கில் இருந்து என் தாத்தாவை கடந்த 22.10.2018ம் தேதியில் விடுதலை செய்யப்பட்டிருந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த குற்றவியல் வழக்கில் என் தாத்தா நேரில் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கு நடவடிக்கைகளில் கலந்து கொண்டு நீதிமன்றத்தால் கேட்ட கேள்விக்குள் அவரால் பதிலளிக்கப்பட்டு நீதிமன்றதால் அவர் குற்றவாளி அல்ல என்று விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்று சொன்னால் அது பற்றி விபரம் எனக்கு தெரியாது. என் தாத்தா முத்தையா மேற்படி உயில் ஏற்பட்ட ஆண்டுக்கு 15 ஆண்டுக்கு முன்பு இருந்தே அவர் மனநலம் உடல் நலம் பாதிக்கபட்டிருந்தது நான் சொல்லவது பொய் என்ற சொன்னால் அது சரியல்ல. என் தாத்தா இறக்கும் காலவரையிலும் அவர் நல்ல உடல் நிலையிலும் நல்ல மனநிலையிலும் தான் இருந்து வந்தார் என்று சொன்னால்அது சரியல்ல. என் தாத்தா இறப்பற்கு முன்பு இருந்தே என் தாய்மாமா கிரகராஜ், வைரபிரகாசம் ஆகியோருக்கு சுய மாக சம்பாத்திய சொத்துக்கள் இருந்துள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பிராது சொத்துக்கள் முத்தையா என்பவரால் சுயமாக சம்பாத்தியம் செய்யப்பட்டு அவர் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள என்றும் நான் சொல்வது போல் கர்த்தா என்ற வகையில் சொத்தானது அவருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்வது பொய் என்று சொன்னால் கர்த்தா வழி சொத்து தான். என் தாத்தா சுயமாக சம்பாத்தியம் செய்த சொத்துக்கள் என்று தெரிந்துவிடும் என்ற காரணத்திற்காக வேண்டி பிராது சொத்துக்களை பொறுத்து வில்லங்க சான்றிதழ்களும் கிரைய ஆவணங்களின் நகல்களும் எடுத்து தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அப்படியில்லை. என் தாத்தா முத்தையா அவர் மகனான கிரகராஜுக்கு 08.07.1998ம் ஆண்டு சொத்தை பொறுத்து கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் அந்த கிரைய ஆவண்த்தின் பதிவு நகலை சாட்சியிடம் 1 முதல் 3 எதிர்வாதிகள் தரப்பு வழக்கிறஞரிடம் படித்து பார்த்து வினவ சாட்சியானவரால் அதனை தன்னால் சரியாக படித்துக்கொள்ள முடியவில்லை என்றும் சாட்சியம் அளிக்கிறார். என் தாத்தா முத்தையா என்பவர் அவர் மகனான கிரகராஜுக்கு 08.07.1998ம் ஆண்டு எழுதிக்கொடுத்த ஆவணம் செல்லாது என்று சொல்லி நாங்கள் இந்த வழக்கில் பரிகாரம் கோரவில்லை என்று சொன்னால் சரிதான். என் தாயார் வழக்கறிஞர் மூலமாக 1 முதல் 3 எதிர்வாதிகளுக்கு கடந்த 29.08.2020ம் ஆண்டு அறிவிப்பு அனுப்பியிருந்து அந்த அறிவிப்புக்கு 1 முதல் 3 எதிர்வாதிகள் தங்களுடைய வழக்கறிஞர் மூலமாக 10.09.2020ம் தேதியில் பதில் அறிவிப்பை அனுப்பியிருந்து அதனை பெற்றுக்கொள்ளப்பட்டுவிட்டதுஎன்று சொன்னால் அது பற்றி தெரியாது. அந்த பதில் அறிவிப்பில் உயில் ஆவணம் இருப்பதை சொல்லி தான் அனுப்பப்பட்டிருந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாயார் அனுப்பியிருந்த அறிவிப்பில் சொத்துக்கள் அவருடைய தகப்பனாரனா முத்தையாவுக்கு சுயாஜ்ஜிதமாக பாத்தியப்பட்ட

சொத்துக்கள் என்று ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் அதனை மறைத்து நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தோம் என்றால் அது சரியல்ல. பிராது சொத்துக்கள் அனைத்தும் என்னுடைய தாத்தா முத்தையாவுக்கு சுயாஜ்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்து என்றுஅதை அவர் உயிரோடு இருந்த காலத்தில் நல்ல மனநிலையிலும் நல்ல சிந்தனையுடனும் யாருமைய தூண்டுதல் இன்றியும் சாட்சிகள் முன்னியில் கடந்த 26.12.2008 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில்ஆவணம் மூலமாக வைரபிரகாசம் என்பவருக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் அப்படியில்லை. முத்தையா இறந்த பின்பு அந்த உயில் ஆனது ஊர்ஜிதத்திற்கு வந்து சொத்துக்களை வைரபிரகாசம் என்பவர் அடைந்து அனுபவித்து வருகின்றார் என்று சொன்னால் அது சரியல்ல. மேற்படி உயில் ஆவணத்திலேயே என் தாத்தா அதில் கண்ட சொத்துக்களுக்கு அவருடைய 3 பெண்மக்களுக்கு எந்தவிதமான பாத்தியமும் உரிமையும் அனுபவமும் இல்லை என்று சொல்லியுள்ளார் என்று சொன்னால் அது பொய். முத்தையாவின் தகப்பனார் காளியப்பனுக்கு முத்தையா மட்டுமே வாரிசு என்று சொன்னால் அப்படியில்லை. காளியம்மாள் என்ற மூத்த சகோதரி ஒருவர் இருந்தார். காளியம்மாள் திருமணம் ஆகாமலேயே சிறுவயதிலேயே இறந்துவிட்டார் என்று சொன்னால் அது சரிதான். பிராது 1வது தபசில் சொத்தை பொறுத்து முத்தையாவின் தாயார் சுப்பம்மாளின் பெயரில் உள்ளதுஎன்பதால் முத்தையாவிற்கு அது சுயசம்பாத்திய சொத்து என்று சொன்னால் அப்படியில்லை. அதனால் பிராது 1வது தபசில் சொத்தை பொறுத்து முத்தையா உயில் எழுதி வைப்பதற்கு அவருக்கு உரிமை உள்ளது என்று சொன்னால் அப்படியில்லை. நாங்கள் 7, 8 எதிர்வாதிகளின் தூண்டுதலின்பேரில் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம்என்று சொன்னால் அப்படியில்லை. 7, 8 எதிர்வாதிகளுக்கும் 1 முதல் 3 எதிர்வாதிகளுக்கும் இடையில் கோப்பநாயக்கன்பட்டியில் உள்ள ஜெயலட்சுமி பயர் ஒர்க்ஸ் என்ற நிறுவனம் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு சென்றுள்ளது என்று சொன்னால் அது பற்றி நான் கேள்விப்பட்டேன். அந்த வழக்கு பற்றி என்னிடத்தில் யார் சொன்னது என்று கேட்டால் வழக்கில் உள்ள 1ம் எதிர்வாதியான சாவித்திரியும் 7ம் எதிர்வாதியான சாந்தலட்சுமியும் சொன்னார்கள். கூட்டாண்மை நிறுவனம் என்பதால் தான் வழக்கில் உள்ள 1 முதல் 3 எதிர்வாதிகளும், 8ம் எதிர்வாதியும் சேர்ந்து சிவகாசியில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் இருந்து ரூ.1,35,00,000/-யை கடனாக பெற்று கூட்டாண்மை நிறுவனத்தை நடத்தி வந்தார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அதற்கு முன்பு அந்த கடனானது முத்தையா பெயரில் தான் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் அனைத்தும் 1 முதுல் 3 எதிர்வாதிகளுக்கு பாத்தியப்பட்டு எதிர்வாதிகளின் தனித்த சுவாதிக அனுபவத்தில் உள்ளது என்பதை நாங்கள் பிராதில் ஒப்புக் கொண்டுவிட்டு நீதிமன்ற முத்திரைக்கட்டணமாக பிரிவு 37(2 ன்) கீழ் நாங்கள செலுத்தியுள்ள நீதிமன்ற முத்திரைக்கட்டணமானது தவறானது என்று சொன்னால் அது சரியல்ல. பிராது சொத்துக்கள் முத்தையாவுக்கு சுய சம்பாத்திய சொத்து என்பதாலும் மேற்படி உயில் ஆவணமும் ஊர்ஜிதத்திற்கு வந்துவிட்டதாலும் பிராது சொத்துக்களில் எங்களுக்கு உரிமையும் அனுபவமும் பங்கு பாகமும் ஏற்படவில்லை என்று சொன்னால் அது தவறு உயிலானது உண்மையில்லை என்று சொல்கிறேன். நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்ககூடியதாக இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 29th day of January 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.